‘இனாம்’ நிலத்திற்குப் பட்டா வேண்டும் எனும் கோரிக்கை! கழகத் தலைவர் தலைமையில் சட்டப் போராட்டம் நடத்தி நிச்சயம் பெற்றுத் தருவோம்!

‘தாராபுரத்தில் உதயசூரியன் வென்றது!’ எனும் இனிய செய்தியை எங்களுக்குத் தாருங்கள்!

தாராபுரம் தேர்தல் பிரச்சாரத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!

தாராபுரம், செப்.29-

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் நடைபெறுவதை யொட்டி, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம், தனது தேர்தல் பரப்புரையைத் தொடங்கினார். குண்டடம் பகுதியில் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில் அவர் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

அவரது உரை வருமாறு :-

உங்களுடைய உற்சாகத்தையும் வரவேற்பையும் பார்க்கும்பொழுது, தாராபுரத்தில் இந்த இடைத்தேர்தலில் வெல்லப் போவது நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழகம்தான், நம் உதய சூரியன்தான் என்றே தோன்றுகிறது. எனவே, நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியை நீங்கள் தேடித் தர வேண்டும்.

அல்வா கொடுத்துவிடுவார்!

ஐந்து மாதங்களுக்கு முன்னால், இதே மாதிரி தாராபுரத்திற்கு வந்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குக் கேட்டு வந்தேன். அப்பொழுதும் ஜெயிக்க வைத்துவிடுவோம் என்று சொல்லி, என்னை அனுப்பி வைத்தீர்கள். ஆனால், எனக்கே அல்வா கொடுத்து விட்டீர்கள்.

இப்பொழுது மீண்டும் அல்வா கொடுப்பீர்களா? நீங்கள் எனக்கு அல்வா கொடுத்தீர்கள் என்றால், முதலமைச்சர் உங்களுக்கு அல்வா கொடுத்துவிடுவார். இப்பொழுது தினமும் கொடுத்துக்கொண்டு இருக்கிறார். சுடச் சுடக் கிண்டிக் கொடுக்கிறார்.

சரி, நேற்று முதலமைச்சர் மதுராந்தகத்தில் பேசினாரே, அதை யாராவது பார்த்தீர்களா? முதலமைச்சர் நேற்று தேர்தல் பிரச்சாரத்திற்காக மதுராந்தகத்தில் பேசினார் அல்லவா, யார் எல்லாம் பார்த்தீர்கள்? காது கிழிந்ததா? பார்த்தவர்கள் சரி பிழைத்துப் போங்கள். பார்க்காதவர்கள் கவலைப்படாதீர்கள். இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் அதேதான் பேசுவார். இந்த உடைந்து போன டேப் ரிக்கார்டர் இருக்கிறதல்லவா, அது தோற்றுவிடும். ஆன் செய்தால், உடனே தி.மு.க., தி.மு.க., தி.மு.க., தி.மு.க., முதலமைச்சர் நேற்று மட்டும் முப்பது நிமிடங்கள்தான் பேசினார். முப்பத்து இரண்டு முறை தி.மு.க., தி.மு.க., தி.மு.க., தி.மு.க., தி.மு.க.காரன்கூட இவ்வளவு முறை தி.மு.க. என்று சொல்லியிருக்கமாட்டான். நல்ல ஒரு முதலமைச்சரை நீங்கள் தேர்ந்தெடுக்கவில்லை.

துரோகிகள் சொல்லாமலே போய்விட்டார்கள்!

ஏப்ரல் 23 தேர்தல் நடந்தது. மே 4 வாக்கு எண்ணிக்கை, தேர்தல் முடிவுக்குப்பின் ஒரு கட்சி ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், 234 தொகுதிகளில் குறைந்தது 118 தொகுதிகள் வெற்றிபெற வேண்டும். ஜெயித்தால், அவர்கள் ஆட்சி அமைக்கலாம். இவர்கள் அவ்வளவு ஜெயித்தார்களா? இல்லை. வெறும் 107 தான். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை இழந்துவிட்டோம், வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம். ஆனால், நீங்கள் இப்பொழுது இருக்கக்கூடிய ஆளுங்கட்சிக்கு வெறும் 107 இடங்கள்தான் கொடுத்தீர்கள்.

இவர் எப்படியாவது ஆட்சி அமைக்க வேண்டும் என்று முயற்சி செய்தார். ஆட்சி அமைக்க வேண்டும் என்று என்ன செய்தார்? நம்முடன் இருந்த கூட்டணிக் கட்சிகள், நம்முடனே இருந்து பத்து ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டு, நம்மோடு கூட்டணி வைத்து, சென்ற தேர்தலில் நம் தலைவரின் முகத்தைக் காட்டி, நம் அரசு செய்த `திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள்’ எல்லாம் கூறி வாக்குக் கேட்டு மக்களைச் சந்தித்து, அந்த வாக்குகளைப் பெற்று, வெற்றி பெற்ற சில கூட்டணிக் கட்சிகள், தலைவரை வந்து பார்த்துச் சொல்லிவிட்டுப் போனார்கள். `ஆளுநர் ஆட்சி வந்துவிடும், அதை அனுமதிக்கக் கூடாது; மீண்டும் தேர்தல் வந்துவிடும், அதை அனுமதிக்கக் கூடாது’ என்று சிலர் நம் தலைவரிடம் சொல்லிவிட்டுப் போனார்கள். ஆனால், சில துரோகிகள் தலைவரிடம் சொல்லாமலே போய்விட்டார்கள். நான் யாரைச் சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். அந்தத் துரோகக் கூட்டத்தை நாம் யாரும் மன்னிக்கவும் மாட்டோம், மறக்கவும் மாட்டோம். தமிழ்நாடும் மன்னிக்காது மறக்காது. நாங்களும் மறக்க மாட்டோம். மன்னிக்க மாட்டோம். ஏற்கனவே அதற்கான வேலைகள் எல்லாம் நடக்க ஆரம்பித்து விட்டன.



அதுமட்டுமல்ல என்ன செய்தார்? பத்தாம் தேதி அதாவது, இப்பொழுது இருக்கக்கூடிய முதலமைச்சர், அவர் தேர்தல் பிரச்சாரத்திற்குக்கூட வீட்டை விட்டு வெளியே வராதவர். ஆனால், அவர் ஆளுநரைப் பார்ப்பதற்கு, டியூஷன் வாத்தியாரைப் பார்க்கப் போவதுபோல் தினமும் மாலையில் புறப்பட்டுப் புறப்பட்டுப் போனார். `எனக்கு ஆட்சி அமைக்க வாய்ப்புக் கொடுங்கள், ஆட்சி அமைக்க வாய்ப்புக் கொடுங்கள்’ என்று அலைந்தார். அவர்களும் நன்றாக அலைய விட்டார்கள்.

சோஃபா டெலிவரி பாய்!

சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை வரவில்லை. பிறகு என்ன செய்தார்? ஒவ்வொரு கூட்டணிக் கட்சித் தலைவராகப் போய்ப் பார்க்கச் சென்றார். நாம் பசித்தது என்றால், வீட்டில் உணவு இல்லை என்றால் என்ன செய்வோம்? ஜோமேட்டோ தெரியுமல்லவா? ஆர்டர் செய்தால், டெலிவரி பாய் அவரே கொண்டு வந்து சாப்பாடு கொடுத்துவிடுவார், பத்தே நிமிடத்தில் வந்துவிடும். கிட்டத்தட்ட ஒரு டெலிவரி பாய் போல எல்லாக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் இவரே கொண்டு போய்ச் சோஃபாவை வழங்கினார்.

எல்லாம் நேரலையில் பார்த்தீர்களா இல்லையா? நான் ஒன்றும் சும்மா சொல்லவில்லை. சும்மா சொல்லவில்லை என்று உங்களுக்குத் தெரியும். நீங்களே சாட்சி. இவரே போய் சோஃபாவைக் கொடுத்தார். அதாவது கட்சியை வாங்க வேண்டும் என்றால், சோஃபா; சட்டமன்ற உறுப்பினர்களை வாங்க வேண்டும் என்றால் ஒரே ஒரு பெட்டி. அப்படித்தான் பெரிய கட்சிகளுக்கு சோஃபாவை அனுப்பி வைத்துத்தான் இவர் ஆட்சி அமைத்தார். அதன் பிறகும் எண்ணிக்கை போதவில்லை.

மே 13-ஆம் தேதி இந்த அரசின் மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தது. அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக நான் எழுந்து நின்று சொன்னேன், பேசினேன். உங்கள் மீது, இந்த அரசின் மீது எங்களுக்கு நம்பிக்கை வரவில்லை. தமிழ்நாட்டு மக்கள் உங்களை முதலமைச்சராகவோ நீங்கள் ஆட்சி செய்ய வேண்டும் என்றோ தேர்ந்தெடுக்கவில்லை. வெறும் 107 சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும்தான் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், எங்கள் கூட்டணியில் இருந்து உருவிவிட்டீர்கள், மூன்று கட்சிகளை உருவியிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ஒரு கும்பலை உடைத்து, அந்தக் கட்சியை இரண்டாக உடைத்து அதிலிருந்து ஒரு குழுவை நீங்கள் சேர்த்துக் கொள்ளப் போகிறீர்கள். அவர்கள் உங்களுக்கு வாக்களிக்கப் போகிறார்கள். அதனால் இந்தக் கொடுமைகளை எல்லாம் பார்க்க நாங்கள் உள்ளே இருக்க மாட்டோம், நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று சொல்லி வெளியே வந்துவிட்டோம். இப்படித்தான் இந்த ஆட்சி அமைந்தது.

இப்பொழுது அவர்களோடு கூட்டணி வைத்த கம்யூனிஸ்ட் இயக்கமே அவர்கள் மீது நம்பிக்கை இல்லாமல், அவர்களை எதிர்த்து இன்றைக்கு இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறதா இல்லையா? கம்யூனிஸ்ட் தலைவர்கள் வந்து பிரச்சாரம் செய்துகொண்டு இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய ஆளுங்கட்சி இந்தத் தேர்தலில் ஜெயிக்கக் கூடாது என்று அவர்களோடு கூட்டணி வைத்திருக்கக்கூடிய கம்யூனிஸ்ட் கட்சி இந்த இடைத்தேர்தலில் போட்டியிடுகிறது.

“ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம், உங்களுக்கு ரூ.2500 கொடுப்பேன்!”

இப்படித்தான் ஆட்சி அமைத்தார். நான் ஒன்றே ஒன்று கேட்கிறேன்; ஆட்சி அமைத்தாரே முதலமைச்சர், இவர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் பிரச்சாரத்தில் என்னென்ன வாக்குறுதி கொடுத்தார்? ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் என்னென்ன செய்யப் போகிறேன் என்று சொன்னார் என்று உங்களுக்கு நினைவிருக்கிறதா?

மகளிர் உரிமைத்தொகை 1,000 ரூபாய் கிடையாது, 2,500 ரூபாயாக உயர்த்தித் தருகிறேன், ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் உயர்த்தித் தருவேன் என்று சொன்னாரா இல்லையா? கொடுத்தாரா? கொடுக்கவில்லை.

அனைத்து வீடுகளுக்கும் ஒரு வருடத்திற்கு ஆறு கேஸ் சிலிண்டர்கள் கொடுப்பேன், ஆட்சிக்கு வந்தவுடனே கொடுப்பேன் என்று சொன்னாரா இல்லையா? கொடுத்தாரா? கொடுக்கவில்லை. இப்பொழுது என்ன தெரியுமா சொல்லியிருக்கிறார்? மூன்று கேஸ் சிலிண்டர்தான் கொடுப்பேன், அதுவும் எனக்கு எப்பொழுது தோன்றுகிறதோ அப்பொழுதுதான் கொடுப்பேன் என்று சொல்லிவிட்டார்.

“இளைஞர்களுக்கு மாதந்தோறும் 4,500 ரூபாய் கொடுப்பேன்!”

அடுத்து இன்னொன்று: படித்து வேலை இல்லாத இளைஞர்களுக்கு மாதந்தோறும் 4,500 ரூபாய் ஊக்கத் தொகை கொடுப்பேன் என்று சொன்னாரா இல்லையா? ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் கொடுப்பேன் என்று சொன்னார். கொடுத்தாரா? கொடுக்கவில்லை.

பயிர்க்கடன் தள்ளுபடி கொடுத்தாரா?

எல்லாவற்றையும் விட முக்கியம், ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் முதல் கையெழுத்து என்ன தெரியுமா சொன்னார்? விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் முழுத் தள்ளுபடி என்று சொன்னாரா இல்லையா? போட்டாரா? கொடுக்கவில்லை. ஆனால், 2007-இல் நாம் ஆட்சிக்கு வந்தவுடனே, 2006-ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற போது, 7,000 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு முழுப் பயிர்க்கடன் தள்ளுபடி செய்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

ஆட்சிக்கு வந்து முறைப்படி பொறுப்பேற்ற அந்த முதல் கையெழுத்து, முதல் கோப்பில் கலைஞர் அந்தக் கையெழுத்தைப் போட்டார்.

இப்படியெல்லாம் சொல்லி ஆட்சிக்கு வந்தவர் என்ன சொன்னார்? கஜானாவைத் துடைத்து வைத்துவிட்டார்கள், பணம் இல்லை, அரசிடம் பணம் இல்லை என்று சொன்னாரா இல்லையா? ஆனால், இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

கடலைப் பார்க்க ரூ.1200 கோடி!

1,200 கோடி ரூபாய்க்குப் புதிய தலைமைச் செயலகம். எங்கே? சென்னையில் பட்டினப்பாக்கத்தில் கடற்கரையை ஒட்டி. அதாவது அவருக்குக் கடலைப் பார்த்து அமர்ந்தால்தான் மூடு வருமாம்; வேலை பார்க்கிற மூடு. கடலைப் பார்த்துத்தான் நீங்கள் அமரவேண்டும் என்று, ஜோசியக்காரர் சொல்லியிருப்பார்.

கஜானாவில் காசு இல்லை! சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கார்!

எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கார். நம் தலைவர் சொல்லிவிட்டார். `நீ முதலில் கொடுத்த வாக்குறுதியான விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்; தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் கார் எதுவும் தேவையில்லை; முதலில் கடனைத் தள்ளுபடி செய்துவிட்டுப் பின்னர், காரை வாங்கிக் கொடு’ என்று சொன்ன முதல் தலைவர் நம் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர். அதன் பிறகுதான் கம்யூனிஸ்ட் கட்சியினர் சொன்னார்கள், அதன் பிறகுதான் பாட்டாளி மக்கள் கட்சி சொன்னார்கள். `ஆமாம் எங்களுக்கு கார் வேண்டாம், முதலில் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்’ என்று சொன்னோம்.

மகளிர் உரிமைத் தொகை!

இப்படி நம் தலைவர் தேர்தல் வாக்குறுதி சொன்னார். ஆட்சிக்கு வந்தோம் என்றால், மகளிர் உரிமைத் தொகையை 2,000 ரூபாயாக நான் உயர்த்தித் தருவேன் என்று சொன்னார். செய்திருப்பாரா மாட்டாரா? இந்த நேரம் கொடுத்திருப்பார் தலைவர். அது மட்டுமல்ல, ஒவ்வொரு மகளிருக்கும் மின்சாதனப் பொருட்கள் வாங்குவதற்கு 8,000 ரூபாய் மதிப்புள்ள கூப்பன் கொடுக்கிறேன் என்றார். இந்நேரம் தலைவர் கொடுத்திருப்பாரா மாட்டாரா?

500 படுகொலைகள் நடந்திருக்கின்றன!

இது ஒரு பக்கம் இப்படி இருக்கிறது. ஐந்து மாதங்களாக எதைக் கேட்டாலும் தி.மு.க, தி.மு.க, தி.மு.க. சட்டம் ஒழுங்கு என்ன பிரச்சினையில் இருக்கிறது, என்ன கேடுகெட்ட நிலைமையில் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். இதுவரைக்கும் இந்த ஆட்சியில் நான்கு மாதங்கள் ஆயிற்று. தமிழ்நாடு முழுவதும் 500 படுகொலைகள் நடந்திருக்கின்றன. கோவையில் மட்டும் சென்ற மாதம் 10 படுகொலைகள் நடந்திருக்கின்றன, கோயம்புத்தூரில் மட்டும் 10 படுகொலைகள். மதுரையில் சென்ற வாரம் மட்டும் எட்டு படுகொலைகள். நேற்று எங்கு பார்த்தாலும் பாலியல் கொடுமைகள்.

நேற்று முதலமைச்சர் மதுராந்தகம் போகிறார், போகின்ற வழியில் வண்டலூர் பக்கத்தில் ஒரு அரசுப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கக்கூடிய மாணவியை அழைத்துச் சென்று பாலியல் வன்முறை செய்திருக்கிறார்கள். அதைப் புகார் கொடுத்த அவர்களுடைய பெற்றோர்களைக் காவல்துறை தடுத்து, `இல்லை பாம்பு கடித்துவிட்டது என்று சொல்லுங்கள்’ என்று கூறி அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

ஆளுங்கட்சி நிர்வாகிகளின் பாலியல் வன்முறை!

இப்படிப்பட்ட ஒரு கேடுகெட்ட ஆட்சி. இந்த முதலமைச்சர் என்ன தெரியுமா சொன்னார்? தாய்மார்களே, உங்களுக்கு நான் அண்ணனாக இருப்பேன், அரணாக இருப்பேன் என்றார். கடைசியில் இந்தப் பாலியல் வன்முறையில் ஈடுபடுவது யார் தெரியுமா? முழுக்க முழுக்க ஆளுங்கட்சியின் நிர்வாகிகள். ஆளுங்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர், ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் சரவணன் அவர்கள் மேலேயே ஒரு புகார் வந்திருக்கிறது. இதையெல்லாம் சட்டமன்றத்தில் நான் கேட்டேன். காவல்துறை மானியக் கோரிக்கையில் நான் பேசினேன். நீங்கள் பார்த்திருப்பீர்கள், சட்டமன்றத்தில் நடப்பதையெல்லாம் பார்க்கிறீர்களா இல்லையா? இப்பொழுதெல்லாம் பிக் பாஸ் பார்க்கிறீர்களோ இல்லையோ சட்டமன்றத்தைப் பார்க்கிறீர்கள். நாங்கள் உள்ளே படுகின்ற கஷ்டம் எங்களுக்குத்தான் தெரியும்.

என்ன நடக்கிறதென்று எதுவுமே தெரியாது!

சட்டமன்றத்தில் ஒவ்வொரு கட்சித் தலைவரும் என்ன பேசுகிறார்கள், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் குறிப்பாக ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ன பேசுகிறார்கள் என்று நீங்கள் எல்லாம் கவனிக்கிறீர்களா இல்லையா? ஒரு சட்டமன்ற உறுப்பினரை எதற்காகத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறீர்கள்? உங்கள் தொகுதியில், உங்கள் பகுதியில் கழிவுநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி, பள்ளிக்கூட வசதி இதெல்லாம் வேண்டும் என்று போய்க் கேளுங்கள் என்று நீங்கள் உரிமையோடு வாக்களித்துச் சட்டமன்ற உறுப்பினரை அனுப்புகிறீர்கள்.

நாங்களும் போய் அதைத்தான் கேட்போம். சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் சொல்வார். இப்பொழுது இருக்கின்ற முதலமைச்சர் வாயைத் திறக்கவே மாட்டார். அவருக்கு உள்ளே என்ன நடக்கிறது என்று எதுவுமே தெரியாது. கேள்வி கேட்டால் பதில் சொல்வார்கள். அப்படிப் பதில் சொல்லும்போது நாம் துணைக் கேள்வி கேட்கலாம், எதிர் கேள்வி கேட்கலாம்.

பதில் சொன்னால் நாம் எதிர்கேள்வி கேட்கலாம். பாட்டுப் பாடினால் என்ன செய்வது? நாங்களும் என்ன செய்வது எதிர்ப் பாட்டா பாடுவது? எல்லாருமே பாட்டுப் பாடுகிறார்கள். எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் பாட்டுப் பாடுகிறார்கள். அமைச்சர்கள் பாட்டுப் பாடுகிறார்கள். சபாநாயகரிடம் போய்ச் சொல்லப் போனால் அவரும் பாட்டுப் பாடுகிறார். நான் பேரவைத் தலைவரிடம் சொல்லிவிட்டேன்: பேரவைத் தலைவர் அவர்களே இது தவறு. இது நடப்பது சரியில்லை, எங்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. நாங்கள் சட்டமன்றத்திற்குத்தான் வந்திருக்கிறோமா அல்லது ‘சூப்பர் சிங்கர்’ நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறோமா என்று எங்களுக்குத் தெரியவில்லை. இந்த லட்சணத்தில் சட்டமன்றம் நடந்துகொண்டு இருக்கிறது என்று சொல்கிறேன். பேரவைத் தலைவர் சிரித்துக்கொண்டே ‘மன்மத வணக்கம்’ என்று சொல்லிவிட்டார். அது தெரியுமா? எனக்கு மன்மத நன்றியா? இப்படியெல்லாம் ஒரு சட்டமன்றம்.

கொடுமையை இங்கே அமர்ந்து எங்களால் பார்க்க முடியவில்லை!

ஒரு சட்டமன்ற உறுப்பினர் எழுந்து நின்று பேசுகிறார். ஓர் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் சொல்கிறார். நாங்கள் முதலமைச்சருக்குப் பின்னால் அமர்ந்திருக்கிறோம், முதலமைச்சருடைய முகம் எங்களுக்குத் தெரியவில்லை, அவர் சிரிக்கும்போது நாங்கள் பார்க்க வேண்டும், அதனால் எங்கள் எல்லாருக்கும் ஒரு டி.வி வசதி, எல்.இ.டி. திரை வசதி செய்து கொடுங்கள் என்றார். நான் சொன்னேன்: நாங்கள் எல்லாம் எழுந்து போய்விடுகிறோம், நீங்கள் எல்லாம் எங்கள் பக்கம் வந்து அமர்ந்துகொள்ளுங்கள், ஏனென்றால் இந்தக் கொடுமையை இங்கே அமர்ந்து எங்களால் பார்க்க முடியவில்லை, எதற்குமே வாயைத் திறக்க மாட்டேன் என்கிறார்.

உண்மையாகவே இதெல்லாம் சட்டமன்றத்தில் நடந்தவை. இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் எழுந்து நின்று சொல்கிறார்: முதலமைச்சர் அவர்களே நான் வேலை இல்லாமல் இருந்தேன் எனக்கு வேலை கொடுத்துவிட்டீர்கள், நான் கார் இல்லாமல் இருந்தேன் எனக்கு கார் கொடுத்துவிட்டீர்கள், நான் வீடு இல்லாமல் இருந்தேன் எனக்கு வீடும் கட்டிக் கொடுத்துவிட்டீர்கள், எனக்கு இப்பொழுது சமீபத்தில் ஒரு காதல் தோல்வி ஏற்பட்டுவிட்டது. நான் பயந்துவிட்டேன். சரி, முதலமைச்சர் இதற்கும் வழி செய்வார் போலிருக்கிறது. இந்தத் திட்டமும் இந்த ஆட்சியில், இது பெரிய மாற்றம் அல்லவா? இதுதான் மாற்றம். ஏற்பாடு செய்வார் போலிருக்கிறது என்று நினைத்தேன்.

பெட்டி பாமாவா?

இப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே இருக்கிறார்கள். சென்ற சட்டமன்றத் தேர்தலில், நீங்கள் ஒரு துரோகியைத் தேர்ந்தெடுத்து அனுப்பிவிட்டீர்கள். பெட்டி பாமாவா? இந்த முதலமைச்சர் நம்மைச் சொல்வார். அதாவது குறை சொல்லும்போது என்ன சொல்வார், பொய்க் குற்றச்சாட்டு என்ன சொல்வார் தெரியுமா? திராவிட முன்னேற்றக் கழகம் வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்து வாக்கு வாங்கிவிட்டார்கள் என்பார்கள். ஆனால், இவர் என்ன தெரியுமா செய்தார்? மாற்றமல்லவா இவர்? இவர் சட்டமன்ற உறுப்பினரையே வாங்கிவிட்டார். வாக்கிற்குப் பணம் கொடுத்து, அவர் போய் தேர்தல் நாளில் வாக்களித்து, அன்று வாக்கு எண்ணிக்கை நடந்து, அவர் வெற்றி பெற்று முடிவு வந்து அதெல்லாம் வேண்டாம். நேரடியாகச் சட்டமன்ற உறுப்பினரை வாங்கிவிடு. அதுகூட வேண்டாம், அதற்கும் மேலாக நேரடியாகக் கட்சியையே வாங்கிவிடு. அ.தி.மு.க-வை இன்றைக்கு இரண்டாக உடைத்து, அப்படித்தான் கட்சியை வாங்கியிருக்கிறார்கள்.

நல்ல வேட்பாளரைத் தேர்ந்தெடுங்கள்!

நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் போட்டியிட்டவரை வெற்றி பெற வைத்து, சட்டமன்றத்திற்கு அனுப்புகிறீர்கள். பதவி ஏற்றுப் பத்தே நாட்களில்... விரலில் வைத்த மை கூட காயவில்லை, பத்தே நாட்களில் பதவியை ராஜினாமா செய்துவிட்டுச் சட்டப் பேரவையிலேயே போய் கட்சி மாறி, மீண்டும் அந்தக் கட்சியிலேயே போய் சீட்டு வாங்கி எவ்வளவு தைரியமாக உங்களை வந்து சந்திக்க வருவார். ஒரு மிகப்பெரிய துரோகி. எவ்வளவு தைரியம்? எவ்வளவு திமிர்? எவ்வளவு கொழுப்பு? அதுவும் இன்னும் மூன்று நாட்களாக அவர்களை வந்து சந்திக்கவே இல்லையாமே, பிரச்சாரத்திற்கே போகவில்லையாம். ஏன்? எங்கு போனாலும் துரத்தித் துரத்தி அடிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அதனால்தான் நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த முறை தயவுசெய்து ஒரு நல்ல வேட்பாளரைத் தேர்ந்தெடுங்கள். அப்படிப்பட்ட வேட்பாளரைத் தலைவர் அவர்கள் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். சகோதரி சுகன்யா அவர்களை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் இங்கே ஜெயிக்க வைக்க வேண்டும். நீங்கள் அத்தனை பேரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று முடிவெடுத்துவிட்டீர்கள்.

நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், அடுத்து ஒன்பது நாட்கள் இருக்கின்றன. வருகின்ற ஒன்பது நாட்களும் நீங்கள் ஒவ்வொருவரும் இந்தப் பிரச்சாரத்தைச் செய்யுங்கள். எதற்காக உதயசூரியன் சின்னத்தில் சகோதரி திருமதி சுகன்யா அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும்? எதற்காக தி.மு.க.விற்கு வாக்களிக்க வேண்டும்? ஏன் இப்பொழுது இருக்கக்கூடிய ஆளுங்கட்சிக்கு வாக்களிக்கக் கூடாது? ஏன் உங்களுக்குச் செய்த துரோகத்திற்கு நீங்கள் ஒரு பதில் தர வேண்டும்? இந்த ஆளுங்கட்சிக்கு ஒரு சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும் என்ற இந்தப் பிரச்சாரத்தை நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் வீட்டில் இருக்கின்றவர்களிடம் பேசுங்கள்,

உங்கள் குடும்பத்தில் இருக்கின்ற வர்களிடம் பேசுங்கள், உங்கள் நண்பர்களிடம் பேசுங்கள், உங்கள் உற்றார் உறவினர்களிடம் பேசுங்கள். நீங்கள் அந்தப் பிரச்சாரத்தைச் செய்தீர்கள் என்றால் நிச்சயம் இந்த முறை உதயசூரியன் சின்னம், தாராபுரத்தில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறப்போவது உறுதி. அதே மாதிரி இங்கே வரும்போது விவசாயத் தோழர்கள், விவசாயிகள் ஒரு முக்கிய மான கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இனாம் நிலத்திற்குப் பட்டா வழங்க வேண்டும் என்ற ஒரு முக்கிய மான கோரிக்கையை வைத்திருக்கிறீர்கள். நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்க்கட்சித் தலைவராக நான், நம்முடைய தலைவரின் தலைமையில் நிச்சயம் அதற்கான சட்டப் போராட்டத்தை நடத்தி, உங்கள் நிலத்திற்குப் பட்டாவை நிச்சயம் நாங்கள் பெற்றுத் தருவோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு உங்களுக்குத் துணையாக நிற்கும் என்று கூறி, வருகின்ற ஆறாம் தேதி சட்டமன்றத் தேர்தலில் வாக்குப் பெட்டியில் மூன்றாவது இடத்தில் சுகன்யாவின் பெயர் இருக்கும். வாக்கு எண்ணிக்கையின் போது அதை முதல் இடத்திற்கு வரச்செய்து, இந்த முறை தாராபுரத்தில் உதயசூரியன் சின்னம் வெற்றி பெற்றுவிட்டது, திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றுவிட்டது என்கிற அந்த வெற்றிச் செய்தியை நீங்கள் எங்களுக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சிறப்பான வரவேற்பை வழங்கியதற்கு உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியையும் அன்பையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

பங்கேற்றவர்கள்

கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, அண்ணன் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், வெள்ளக்கோயில் சாமிநாதன், மாவட்டக் கழகச் செயலாளர் பத்மநாபன், தேர்தல் பொறுப்பாளர்கள் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் செல்வராஜ், தளபதி முருகேசன், தொண்டா முத்தூர் ரவி, துரை தமிழ்ச்செல்வன், கிரகாம் பெல், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சகோதரர் பிரகாஷ், முன்னாள் அமைச்சர் ஆவுடையப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் சீனிவாசன், ஜெயக்குமார், மாவட்டத் துணைச் செயலாளர் கே.ஆர்.முத்துக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தனசேகர், பொதுக்குழு உறுப்பினர் கருணாகரன், சந்திரசேகரன், ராமசாமி, அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் செந்தில் செல்வன், தி.மு.ராஜேந்திரன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இன்பாரகு, சகோதரர் ஆனந்த்குமார், சத்யா பழனிக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சகோதரர் யுவராஜ், அனைத்துக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.